(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023**

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

**5th Term Examination - 2023**

| | | |
|---|---|---|
| **வணிகக்கல்வி - I** | **Two Hours** | **32 T I** |
| **Busincss Studics - I** | **Gr : 13 (2023)** | |

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள்:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *1* தொடக்கம் *30* வரையுள்ள சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- *31* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 – 30* | |
| *31 – 50* | |
| மொத்தம் | |

## பகுதி I

*01)* பிரபல பாதணி உற்பத்தி நிறுவனமான “ஸ்மார்ட்” (Smart) வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் தேவையாக அமைவது.

*(1)* உணவு *(2)* உடை *(3)* சப்பாத்து
*(4)* போக்குவரத்து *(5)* காலுறை (............)

*02)* உற்பத்தித் தன்மையடிப்படையில் வணிகங்களை பொருள் உற்பத்தி வணிகம், சேவை உற்பத்தி வணிகம் என வகைப்படுத்த முடியும். சேவை உற்பத்தி வணிகத்தின் பண்புகள் தொடர்பாக மாணவர் ஒருவரால் வழங்கப்பட்ட கூற்றுக்கள் சில கீழே தரப்படுகின்றது.

A- கட்புலனாகா உற்பத்திகளை மேற்கொள்ளும் வணிகங்களாகும்.

B- ஆக்கம், கட்டுமானம், சுரங்கம் அகழ்தல், விவசாயம் என்பவற்றினை இவற்றிற்கு உதாரணமாகக் கூற முடியும்.

C- இவ் வணிகங்கள் பெரும்பாலும் ஓரினத்தன்மை கொண்ட உற்பத்திகளையே மேற்கொள்ளும்.

D- இவை பெரும்பாலும் ஊழியச் செறிவுடைய வணிகங்களாகக் காணப்படும்.

மேற்கூறிய கூற்றுக்களை சரியான கூற்று, பிழையான கூற்று என வகைப்படுத்தும் போது பொருத்தமான விடைத்தொகுதியாக அமைவது,

| | சரியான கூற்று | பிழையான கூற்று |
|---|---|---|
| *(1)* | A,B | C,D |
| *(2)* | A,C | B,D |
| *(3)* | B,D | A,C |
| *(4)* | C,D | A,B |
| *(5)* | A,D | B,C |

(............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03) அட்டவணை X இல் வணிகமொன்றின் உற்பத்திக் காரணிகளும், அட்டவணை Y இல் அவற்றிற்கான விரிவான விளக்கங்களும் தரப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| A- நிலம் | 1. வணிகமொன்றின் விவேகச் செயற்பாடுகளின் திரட்சி |
| B- உழைப்பு | 2. பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்குத் தேவையானவற்றை ஒழுங்கமைத்துச் செயற்படுத்துவது, |
| C- மூலதனம் | 3. பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்கு மனிதனால் உருவாக்கப்படுபவை. |
| D- முயற்சி | 4. பூமிப் பிரதேசம் மட்டுமன்றி அதனுடன் சேர்ந்த எல்லா இயற்கை வளங்களையும் குறிப்பது, |
| E- அறிவு | 5. பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு மனிதனால் வழங்கப்படும் உடல், உள ரீதியான பங்களிப்பு. |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 4, B – 5, C – 3, D – 1, E – 2
(2) A – 4, B – 5, C – 2, D – 1, E – 3
(3) A – 4, B – 5, C – 3, D – 2, E – 1
(4) A – 5, B – 4, C – 3, D – 2, E – 1
(5) A – 5, B – 4, C – 3, D – 1, E – 2 (...........)

04) வணிகச் சூழல் காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.

a. கல்விமட்டம்
b. வயது மட்டம்
c. பல்லின சமூக அமைப்பு
d. மனை அமைப்பு

மேற்கூறிய சூழல் காரணிகள் உள்ளடங்கும் வணிகச் சூழலாக அமைவது,

(1) தொழில்நுட்பச் சூழல் (2) சமூக கலாசார சூழல் (3) இயற்கைச் சூழல்
(4) மக்கட் சூழல் (5) அண்மிய சூழல் (...........)

05) பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் தகவல் பெறும் உரிமை மீறப்பட்டுள்ளது என நீங்கள் கருதுவீர்?


(1) வியாபாரி ஒருவர் அங்கீகரிக்கப்படாத இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் போது
(2) மிளகுடன் பப்பாசி விதைகளை சேர்த்து கலப்படம் செய்திருக்கும் போது
(3) நிறமூட்டுவதற்காக உடலுக்குத் தீங்கான இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்திருக்கும் போது
(4) மரக்கறி வகை, பழங்கள் கெடாது இருப்பதற்காக மருந்துகளை பாவித்திருக்கும் போது
(5) பொருள் ஒன்றின் பொதியிடலில் அதனைப் பயன்படுத்தும் முறை பற்றி வெளிப்படுத்தாதிருக்கும் போது (...........)

06) பங்கு வழங்கல் மற்றும் இலாபப் பகிர்வை மேற்கொள்ளாத ஆகக் குறைந்தது இரண்டு அங்கத்தவர்களையும், உச்ச எல்லை வரையறுக்கப்படாததும் பொது நோக்கமொன்றை முன்வைத்து ஆரம்பிக்கும் கம்பனி வகைக்கு உதாரணமாக அமைவது?

(1) ஏசியா பசுபிக் கம்பனி
(2) கொழும்பு பங்கு பரிமாற்றகம்
(3) ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கம்பனி
(4) இலங்கை மின்சார (தனிக்) கம்பனி
(5) வரையறுத்த மலிபன் பிஸ்கற் கம்பனி (...........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

07) வணிக இணைப்புத் தொடர்பாக பின்வரும் வரைபடத்தில் A, B, C எனக் குறிக்கப்படும் எழுத்துக்களால் இனங்காணக்கூடிய வணிக இணைப்பு வகையை வெளிப்படுத்தும் விடைத்தொகுதியினை தெரிவு செய்க.




(1) A- பின்நோக்கிய நிலைக்குத்து இணைப்பு B- முன்நோக்கிய நிலைக்குத்து இணைப்பு
C- முரண்பாடான இணைப்பு

(2) A – முரண்பாடான இணைப்பு B – முன்நோக்கிய நிலைக்குத்து இணைப்பு
C – பின்நோக்கிய நிலைக்குத்து இணைப்பு

(3) A – முரண்பாடான இணைப்பு B – முன்நோக்கிய நிலைக்குத்து இணைப்பு
C – முரண்பாடான இணைப்பு

(4) A – முன்நோக்கிய நிலைக்குத்து இணைப்பு B – கிடையான இணைப்பு
C – முரண்பாடான இணைப்பு

(5) A – பின்னோக்கிய நிலைக்குத்து இணைப்பு B – முரண்பாடான இணைப்பு
C – முன்னோக்கிய நிலைக்குத்து இணைப்பு (............)

08) பணத்தின் தொழிற்பாடுகள் X நிரலிலும் அதற்குரிய உதாரணங்கள் Y நிரலிலும் தரப்படுகின்றது.

| X | Y |
|---|---|
| A. பரிமாற்றூடகத் தொழிற்பாடு | 1. பாடசாலை புத்தகப்பை (Bag) ஒன்றின் பெறுமதி ரூ.2000 எனக் குறித்தல் |
| B. பெறுமதிகளை அளவிடும் அளவீட்டுக் கருவித் தொழிற்பாடு | 2. 2023 ஜனவரி மாதத்தில் ரூ.10000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு 2023 மார்ச் மாதத்தில் பணத்தை செலுத்த ஒப்பந்தம் செய்தல். |
| C. பெறுமானத் திரட்டுத் தொழிற்பாடு | 3. தொலைக்காட்சி ஒன்றினை ரூ.50 000 இற்கு கொள்வனவு செய்தல். |
| D. பிற்போட்டப்பட்ட கொடுப்பனவு ஊடகத் தொழிற்பாடு | 4. காசு ரூ.100 000 இனை சேமித்தல். |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 2, B – 1, C – 3, D – 4
(2) A – 1, B – 3, C – 4, D – 2
(3) A – 3, B – 1, C – 4, D – 2
(4) A – 3, B – 1, D – 2, C – 4
(5) A – 3, B – 2, D – 4, C – 1 (............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09) தும்புத் தொழிற்சாலை நடாத்தும் தமிழ்ச் செல்வன் என்பவரின் வணிகத்தின் சிறிய / நடுத்தரவு வணிகங்களை வகைப்படுத்தும் நியதிகளுக்கான உதாரணங்கள் வருமாறு,

A- தமிழ்ச் செல்வன் வணிகத்தை ஆரம்பிப்பதற்கு ரூ. 200 000 மூலதனம் இட்டிருந்தார்.

B- குறித்த வணிகத்தின் ஒழுங்கமைப்பு தனித்து தொழிற்பாட்டு அடிப்படையில் காணப்பட்டது.

C- உற்பத்தி நடவடிக்கையின் போது பெரும்பாலும் ஊழியர் சார்ந்த தொழில்நுட்பத்தையே பின்பற்றுகின்றார்.

D- வணிகத்தில் 20 முகாமைசாரா ஊழியர்களும், 5 முகாமைசார் ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர்.


E- வணிகத்தின் உற்பத்திப்பொருட்களுக்கு கிராமப்புறங்களில் அதிக சந்தை வாய்ப்பு காணப்பட்டது.

F- மாதாந்தம் 50 கிலோவாற்று அம்பியர் பயன்படுத்தப்படுகின்றது.

மேற்படி சிற்றளவு வணிகங்களை வகைப்படுத்தும் நியதிகளுக்கான உதாரணங்களில் பண்புசார் அளவீடுகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A,D,F (2) A,D,E (3) D,E,F (4) B,C,E (5) B,C,F (............)

10) காசோலை குறுக்குக் கோடிடலின் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளது.




பொதுவான (சாதாரண) குறுக்குக் கோடிடல்களை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையினைத் தெரிவு செய்க.

(1) A,D,E (2) A,D,F (3) B,D,E (4) D,E,F (5) C,D,E (............)

11) காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் வெளிப்படுத்தப்பட்ட சில கூற்றுக்கள் வருமாறு,

A- மித்திரனுக்கு ஒரேயொரு உறவினர் மூத்த சகோதரராக சகாதேவன் இருந்த போதிலும் அவரின் ஆயுளை மித்திரன் காப்புறுதி செய்ய முடியாது.

B- காப்புறுதி ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளும் போது தனஞ்செயன் தனது நோயினை வெளிப்படுத்தாமையினால் இழப்பீட்டினை செலுத்த முடியாது என நிராகரித்தது.

C- நட்ட ஈட்டினைச் செலுத்த முன்னர் விபத்தில் சேதமடைந்த நகுலனின் லொறியினை காப்புறுதி நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்கூறிய கூற்றுக்களுக்குப் பொருத்தமாக அமையும் காப்புறுதித் தத்துவங்கள் முறையே,

(1) A- அண்மைக்காரணித் தத்துவம் B- காப்புறுதி செய்யத்தகு உரிமை.
C- உச்ச நம்பிக்கைத் தத்துவம்

(2) A- காப்புறுதி செய்யத்தகு உரிமை B- உச்ச நம்பிக்கை தத்துவம்
C- பதிலாள் வைப்புத் தத்துவம்

(3) A- உச்ச நம்பிக்கைத் தத்துவம் B- காப்புறுதி செய்யத்தகு உரிமை
C- அண்மிய காரணித் தத்துவம்

(4) A- காப்புறுதி செய்யத்தகு உரிமை B- பதிலாள் வைப்புத் தத்துவம்
C- உச்ச நம்பிக்கைத் தத்துவம்

(5) A- காப்புறுதி செய்யத்தகு உரிமை B- இழப்பீட்டுத் தத்துவம்
C- அண்மைக்காரணித் தத்துவம் (............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12) பொருட்களின் உற்பத்தியும், நுகர்வும் வேறுபட்ட இடங்களில் நிகழ்வதற்கு காரணமாக அமையும் துணைநிலைச் சேவைகளில் ஒன்று.

(1) தொடர்பாடலாகும்
(2) களஞ்சியப்படுத்தலாகும்
(3) வங்கித் தொழிற்பாடாகும்
(4) போக்குவரத்தாகும்
(5) மேற்கூறிய எவையுமல்ல. (............)

13) தனியார் துறையில் நீண்டகாலம் நிலைப்புத் தன்மை உள்ளதும், பொதுத்துறையில் சட்ட ஆளுமையுள்ளதுமான வணிக அமைப்புக்களைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

(1) கூட்டுறவு வணிகம், அரச திணைக்களங்கள்
(2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, அரச திணைக்களங்கள்
(3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, அரச கூட்டுத்தாபனங்கள்
(4) தனியுடைமை வணிகம், அரச கூட்டுத்தாபனங்கள்
(5) பங்குடமை வணிகம், உள்ளூராட்சி சபையின் கீழ் இயங்கும் வணிகங்கள். (............)

14) உற்பத்தியின் பின்னர் இறுதி நுகர்வோரின் கைக்குக் கிடைக்கச் செய்தல் சிக்கல் நிறைந்த ஏற்பாட்டியல் (Logistrc) முறைமைக்கு உதாரணமாக அமைவது,

(1) விமானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் ஏற்பாட்டியல் முறைமை.
(2) இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் ஏற்பாட்டியல் முறைமை.
(3) நெஸ்லே, யுனிலிவர் போன்ற நுகர்வுப் பொருட்களை வழங்கும் நிறுவனங்களின் ஏற்பாட்டியல் முறைமை.
(4) பயன்படுத்திய பொருட்களை மீள உற்பத்தியாளரை சென்றடையச் செய்யும் ஏற்பாட்டியல் முறைமை.
(5) வாயுத் தாங்கி (Gas Slinder) போன்ற மீள ஒப்படைக்கும் பொருட்களுக்கான ஏற்பாட்டியல் முறைமை. (............)

15) பொதுசனத் தொடர்பாடல் (Mass Media) ஊடகங்களுக்கு உதாரணங்களாக அமையும் விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) அறிவித்தல் பலகை, சுற்றறிக்கை, கடிதம்
(2) தொலைபேசி, கருத்தரங்கு, இலத்திரனியல் தபால்
(3) வீதிக் குறியீடுகள், இலத்திரனியல் மணி, அப்பியுலன்ஸ் சமிக்ஞை
(4) குறுஞ்செய்திச் சேவை, நேர்முக உரையாடல், ஒலி அஞ்சல்
(5) பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி (............)

16) மொத்த வியாபாரத்தின் பண்பொன்றாகக் கருதப்பட முடியாதது.

(1) பல்வேறு வகையான பொருட்களை விற்பனைக்காக முன்வைத்தல்.
(2) வியாபாரக் கழிவுகள் வழங்குதல்
(3) சந்தை தொடர்பான ஆய்வுகள் செய்தல்.
(4) பொருட்களை அதிகளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
(5) மீள் விற்பனை நோக்கில் பொருள் கொள்வனவு செய்யப்படல். (............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

17) நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதும் செலாவணி விகிதம், கொடுப்பனவு (சென்மதி நிலுவை) மீதிகள் என்பவற்றை மேற்பார்வை செய்யும் சர்வதேச அமைப்பாக அமைவது?

(1) உலக வியாபார அமைப்பு (WTO)

(2) சார்க் அமைப்பு (SAARC)

(3) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

(4) உலக வங்கி (IBRD)

(5) சர்வதேச நாணய நிதியம் (IMF) (............)

18) வரையறுத்த இரட்ணம் கம்பனி ஒரு தொகுதி மடிக்கணினிகளை மடு கல்வி வலயத்திற்கு விற்பனை செய்தது. இதன்மூலம் வெளிப்படுத்தப்படும் இலத்திரனியல் வியாபார முறையாக அமைவது?

(1) B2B- வணிகரிடமிருந்து வணிகருக்கு

(2) B2C- வணிகரிடமிருந்து நுகர்வோருக்கு

(3) G2C- அரசிடமிருந்து குடிமக்களுக்கு

(4) B2G- வணிகரிடமிருந்து அரசிற்கு

(5) C2G- குடிமக்களிடமிருந்து அரசிற்கு (............)

19) முகாமையாளர் ஒருவரின் திறன்கள் பற்றிய கூற்றுக்கள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A : ஏதேனும் விசேட துறைக்குரிய ஏதேனும் கருமங்களைச் செய்வதற்கு முகாமையாளர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய சிறப்பறிவு, ஆற்றல், அனுபவம் தொழில்நுட்பத்திறன் ஆகும்.

கூற்று B : அமைப்பொன்றின் ஊழியர்களின் வேலைகளுடன் நேரடியாகத் தொடர்புபடும் கீழ்மட்ட முகாமையாளர்களுக்கு தொழில்நுட்பத்திறன் கூடுதலாகத் தேவைப்படும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களில்,

(1) கூற்று A சரியானது, கூற்று B பிழையானது.

(2) இரண்டு கூற்றுக்களும் பிழையானவை.

(3) கூற்று A பிழையானது, கூற்று B சரியானதாகும்.

(4) A சரியானதாகும் அதேவேளை A யினூடாக B விபரிக்கப்படும்.

(5) A சரியானதாகும் அதேவேளை A யினூடாக B விபரிக்கப்படவில்லை. (............)

20) வணிகமொன்றின் நிறுவனக் கட்டமைப்பு வெளிப்படுத்துவது?

(1) நிறுவனத்திற்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பினையாகும்.

(2) நிறுவன அங்கத்தவர்களுக்கும், வேலைகளுக்கும், வளங்களுக்கும் இடையிலான தொடர்பினையாகும்.

(3) நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பினையாகும்.

(4) நிறுவன வழங்குநர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான தொடர்பினையாகும்.

(5) நிறுவனத்தின் போட்டியாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான தொடர்பினையாகும். (............)

21) கட்டுப்படுத்தல் செயன்முறையொன்றின் படிமுறையொன்றாகக் கருதப்பட முடியாதது.

(1) நியமங்களை நிறுவுதல்.

(2) திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

(3) மாறல்களை இனங்காணல்

(4) செயற்பாட்டு விளைவுகளை அளத்தல்.

(5) வளங்களைப் பகிர்ந்தளித்தல். (............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) இருப்பு மட்டங்களைப் பேணுவதற்காகக் கணிப்பிடப்படும் மறுகட்டளை மட்டம், இழிவு இருப்பு மட்டம் என்பவற்றிற்கான கீழே தரப்படும் சமன்பாடுகளின் இடைவெளியில் வரும் சொற்பதங்களை இனங்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

மறுகட்டளை மட்டம் = Ⓐ x உச்ச கட்டளைக் காலம்

இழிவு இருப்பு மட்டம் = Ⓑ - (சராசரி இருப்பு பயன்பாடு x சராசரி கட்டளைக்காலம்)

(1) Ⓐ இழிவு இருப்புப் பயன்பாடு, Ⓑ மறுகட்டளை மட்டம்
(2) Ⓐ சராசரி இருப்புப் பயன்பாடு, Ⓑ மறுகட்டளை மட்டம்
(3) Ⓐ உச்ச இருப்புப் பயன்பாடு, Ⓑ மறுகட்டளை மட்டம்
(4) Ⓐ உச்ச இருப்புப் பயன்பாடு, Ⓑ மறுகட்டளைத் தொகை
(5) Ⓐ இழிவு கட்டளைக் காலம், Ⓑ மறுகட்டளைத் தொகை (............)

23) உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்திகளை மேற்கொள்ளும் போது பல்வேறுபட்ட உற்பத்தி முறைகளை பயன்படுத்துகின்றன. அந்த வகையில் சமகாலக்கேள்வி மற்றும் எதிர்காலக் கேள்வி அடிப்படையில் மேற்கொள்ளும் உற்பத்திமுறைகளை இனங்காட்டும் விடையாக அமைவது?
(1) செயன்முறை உற்பத்தி, வேலை உற்பத்தி (கட்டளை உற்பத்தி)
(2) பாய்ச்சல் உற்பத்தி, தொகுதி உற்பத்தி
(3) பாய்ச்சல் உற்பத்தி, செயன்முறை உற்பத்தி
(4) வேலை உற்பத்தி, பாய்ச்சல் உற்பத்தி
(5) தொகுதி உற்பத்தி, வேலை உற்பத்தி (............)

24) சந்தைத் துண்டமாக்கல்களின் அடிப்படையில் மக்கள் ரீதியான (Demographic Segmentation) காரணிகளுக்குள் உள்ளடங்கும் விடைத் தொகுதியாக அமைவது?
(1) குடும்பமொன்றின் கல்வி, தொழிற்கல்வி, இனம், சமயம்
(2) நாடுகள், காலநிலை, நகரங்களின் விசாலம், சனத்தொகை அடர்த்தி
(3) சமூக வகுப்பு, ஆளுமைத்தன்மை, வாழ்க்கைப்போக்கு, பக்கச்சார்பு
(4) கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம், மனப்பாங்கு, பக்கச்சார்பு, சனத்தொகை அடர்த்தி
(5) காலநிலை, நகரங்களின் விசாலம், தொழிற்கல்வி, இனம் (............)

25) பெறுமானமுள்ள யாதேனுமொன்றை (உற்பத்திப்பொருள்) இரு பிரிவினர்களதும் உடன்பாட்டிற்கமைய அவ்விரு பிரிவினருக்குமிடையே கொடுக்கல் வாங்கல் செய்யும் சந்தைப்படுத்தல் மைய எண்ணக்கருவாக (Core concept) அமைவது?
(1) பரிமாற்றம் (Exchange)
(2) போட்டி நிலைமை (Competition)
(3) கொடுக்கல் வாங்கல் (Transaction)
(4) தொடர்பு (Relationship)
(5) வழங்கல் சங்கிலி (Supply chain) (............)

26) உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்டத்தின் எக்கட்டங்களில் கடுமையான மேம்படுத்தல் தந்திரோபாயங்களை பயன்படுத்த வேண்டும்?
(1) அபிவிருத்திக் கட்டம், வீழ்ச்சிக் கட்டம்
(2) வளர்ச்சிக் கட்டம், முதிர்ச்சிக் கட்டம்
(3) அறிமுகக் கட்டம், வளர்ச்சிக் கட்டம்
(4) அறிமுகக் கட்டம், முதிர்ச்சிக் கட்டம்
(5) முதிர்ச்சிக் கட்டம், வீழ்ச்சிக்கட்டம் (............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

27) நிதியீட்டல் வழிமுறைகள் சில கீழே தரப்படுகின்றன.

A- பங்கு வழங்கல்
B- குத்தகை
C- வணிகப்பத்திரம்
D- வியாபாரக்கடன்
E- தொகுதிக் கடன் பத்திரம்
F- வங்கி மேலதிகப் பற்று
G- வங்கிக் கடன்
H- செலுத்த வேண்டிய சென்மதிகள்

மேற்குறித்த நிதியிட்டல் வழிமுறைகளை குறுங்கால நிதியிட்டல் வழிமுறை, நீண்டகால நிதியீட்டல் வழிமுறை என வகைப்படுத்தும் போது சரியாக அமையும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

| | குறுங்கால நிதியீட்டல் வழிமுறை | நீண்டகால நிதியீட்டல் வழிமுறை |
|---|---|---|
| (1) | B, C, D, H | A, F, G, H |
| (2) | C, D, F, H | A, B, E, G |
| (3) | C, D, F, G | A, B, G, H |
| (4) | A, B, F, G | C, D, F, H |
| (5) | A, B, F, H | C, D, E, G |

(............)

28) பொருளாதாரமொன்றின் நிதி முறைமையினுள் உள்ளடங்கும் நிதி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உதாரணமாக அமைவது?

(1) வங்கிகளுக்கு இடையிலான அழைப்பு கடன்சந்தை
(2) கம்பனி தொகுதிக்கடன்
(3) பிரமைப்படுத்திய காசோலைத் தீர்ப்பனவு முறைமை
(4) உத்தரவுப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்
(5) கம்பனி தொகுதிக்கடன்கள் (............)

29) வேலை விபரணம் ஒன்றில் (Job Specification) உள்ளடக்கப்படாத தகவல் ஒன்று.

(1) பதவியின் பெயர்
(2) சேவை நிபந்தனைகள்
(3) சேவைப் பிரிவு
(4) கல்வித் தகைமைகள்
(5) பதவிக்குரிய பணிகள் (............)

30) உள்ளக ஆட்சேர்ப்பின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மையாக அமைவது

(1) புதிய வகையான அறிவினைக் கொண்ட நபர்களை ஆட்சேர்ப்பு செய்து கொள்ள முடிதல்.
(2) ஊழியர் மத்தியில் அனாவசியதானதொரு போட்டியை உருவாக்குதல் ஆகும்.
(3) அதியளவான விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்து கொள்ள முடிதல்.
(4) ஊழியர் ஈடுபாடு அதிகரிக்கும்.
(5) ஆட்சேர்ப்பு செலவு அதிகரிக்கும் (............)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி கீறிட்ட இடங்களை நிரப்புக.***

31) வணிகங்களை வகைப்படுத்தும் நியதிகளான உற்பத்தியின் தன்மை, உற்பத்தித்துறை என்பவற்றுக்குள் உள்ளடங்கும் சில கூறுகள் கீழே தரப்படுகின்றது.

A – விவசாயம், கால்நடை, காட்டுவளம், மீன்பிடிக் கைத்தொழில்

B – சுரங்க மறுத்தலும் கனிய அகழ்வும்.

C – மின்சாரம், எரிவாயு, நீர்

D – நிர்மாணக் கைத்தொழில்

E – மொத்த சில்லறை வியாபாரம்

F – போக்குவரத்தும் தொடர்பாடலும்

G – உற்பத்திக் கைத்தொழில்

H – நீர் சுத்திகரிப்பும், விநியோகமும்

I – கழிவகற்றல் முகாமைத்துவம்

மேற்படி கூறுகளின் அடிப்படையில் கேட்கப்படும் வினாக்களுக்கு அவற்றினைக் குறிக்கும் எழுத்துக்களை மட்டும் குறிப்பிடுக.

அ) முதல்நிலை உற்பத்தியில் உள்ளடங்கும் கூறுகளாக ................. காணப்படுவதுடன், இரண்டாம் நிலை உற்பத்திக்குள் ................. உள்ளடங்குகின்றன.

ஆ) ................. என்பன விவசாயத்துறையின் கூறுகளாக காணப்படும் அதேவேளை கைத்தொழில் துறைக்குள் ................. உள்ளடங்குகின்றன.

32) அ) வணிகமொன்றின் அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கு இயன்றளவில் நியாயமொன்று கிடைக்கக்கூடிய வகையில் கருமமாற்றுதல் ................. எனப்படுவதுடன், அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் நல்லவை, தீயவை தொடர்பாக விளங்கிச் செயற்படல் ................. ஆகும்.


ஆ) ஒரு நாட்டின் பணநிரம்பலை கட்டுப்படுத்த பயன்படுத்தும் பிரதான கருவி ................. ஆகக் காணப்படுவதுடன் இவற்றில் மாற்றம் செய்வதன் மூலம் நாட்டில் பணநிரம்பலை கட்டுப்படுத்துவதற்கு ................. கொள்கை பயன்படுத்தப்படுகின்றது.

33) அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அனைத்தும் பெயரின் முன்னால் ................. என்னும் பதத்தை இடுவதுடன், பட்டியல் படுத்தப்பட்டக் கம்பனிகள் “கம்பனி” என்ற பதத்திற்கு முன்னால் ................. என்ற பதத்தை இடுதல் வேண்டும்.

ஆ) முயற்சியாளரின் அடிப்படைப் பணியாக ................. கருதப்படுவதுடன், குறிப்பிட்ட கைத்தொழில் துறைக்குள் தனது செல்வாக்கை / அதிகாரத்தை செலுத்த முடியாத வணிகம் ................. என அழைக்கப்படும்.

34) சட்டத்தின்படி கைமாறத்தக்க சாதனங்களாக (1) ................. (2) ................. காணப்படுவதுடன் கைமாறத்தகாத சாதனங்களாக (1) ................. (2) ................. காணப்படுகின்றது.

35) பின்வரும் வெற்றுக்கூடுகளைப் பொருத்தமான சொற்களை இடுவதன் மூலம் பூரணப்படுத்துக.




36) அ) அமைப்பொன்றின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தனிநபர்கள் அல்லது குழுக்களின் நடத்தைகளில் அழுத்தம் ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் ……………… ஆகும்.

ஆ) அமைப்பொன்றின் முதல்வர்கள் அல்லது உரிமையாளர்களினால் உருவாக்கப்படும் வணிக எதிர்பார்ப்பு ……………… ஆகக் காணப்படுவதுடன் அதனை மேலும் விரிவாகத் தெளிவுபடுத்துவது ……………… ஆகும்.

37) அ) தளபாட உற்பத்தி நிறுவனமொன்றில் காணப்படும் செலவுகளான கட்டட வாடகை, காவலாளர் சம்பளம் என்பன ……………… கிரயமாக காணப்படுவதுடன், பலகைக்கான கிரயம், மெருகூட்டுதல் செலவுகள் என்பன ……………… கிரயமாகக் கருதப்படும்.

ஆ) உற்பத்திக்கான வளங்களை உற்பத்தி இடம்பெறும் இடத்திற்கே கொண்டு வந்து உற்பத்தி இடம்பெறுவதற்கு ஒழுங்கமைக்கப்படுகின்ற தள அமைப்பு ……………… ஆகக் காணப்படுவதுடன் இதற்கு உதாரணமாக ……………… இனைக் குறிப்பிட முடியும்.

38) அ) சேவை சந்தைப்படுத்தல் கலவைக்குள் (1) மனிதர்கள் (விற்பனை ஊழியர்கள்) (people) மற்றும் (2) ……………… (3) ……………… என்பன உள்ளடக்கப்படுகின்றது.

ஆ) பெண்களுக்கான சேவை விற்பனையினை அதிகரிப்பதற்காக "ஆடித்தள்ளுபடி மலிவு விற்பனை நடத்தப்படவுள்ளதனை தொலைக்காட்சி ஊடகத்தின் மூலம் அறியச் செய்யப்பட்டது. இங்கு பயன்படுத்தப்பட்ட மேம்படுத்தல் கலவைகளாக (1) …………………………….. (2) …………………………….. இனைக் குறிப்பிட முடியும்.

39) அ) நிதித்திட்டமிடல், கட்டுப்படுத்தல் உபகரணங்களாக (1) ……………… (2) ……………… பயன்படுத்தப்படுகின்றது.

ஆ) வணிகத்திடம் காணப்படும் மொத்தச் சொத்துக்கள் எந்தளவில் வினைத்திறன் கொண்டதாக பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய ……………… விகிதம் கணிப்பிடப்படுவதுடன், உரிமை மூலதனத்திற்கும், கடன் மூலதனத்திற்கும் இடையேயான தொடர்பை ……………… விகிதம் காட்டுகின்றது.

40) குறிப்பிட்ட நோக்கமொன்றை நிறைவேற்றும் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்ட வேலை அலகொன்று எனும் வகையில் பணிகள் மற்றும் (1) ……………… (2) ……………… என்பவற்றைத் தயாரித்தல் ……………… ஆகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடை எழுதுக.***

41) அண்மிய சூழல் காரணிகள் (கிட்டிய / பணி) நான்கினைக் குறிப்பிடுக.

(1) …………………………………………………………………………………………………...

(2) …………………………………………………………………………………………………...

(3) …………………………………………………………………………………………………..

(4) …………………………………………………………………………………………………...

42) அரசு தனது நிதிக் கொள்கையினை நடைமுறைப்படுத்த பயன்படுத்தும் கருவிகள் நான்கு தருக.

(1) …………………………………………………………………………………………………...

(2) …………………………………………………………………………………………………...

(3) …………………………………………………………………………………………………...

(4) …………………………………………………………………………………………………...

43) பங்குடமை வணிகமொன்றில் பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் சட்டங்களைக் குறிப்பிடுக.

A – ஒப்பந்தத்தில் குறிப்பிடாத விடயங்கள் தொடர்பில் பிரச்சினையொன்று ஏற்படும்போது

…………………………………………………………………………………………………..

B – பெயரானது பங்காளரின் பெயரை ஒத்ததாக காணப்படாத போது

…………………………………………………………………………………………………..

C - மூலதனம் ரூ 1000 க்கு மேற்பட்டு காணப்படும் போது

…………………………………………………………………………………………..............

D – பங்காளரின் உச்ச எண்ணிக்கை 20 என வரையறுக்கும் போது

…………………………………………………………………………………………………..

44) விசேட வகை நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகள் சில கீழே தரப்படுகின்றது. குறிப்பிட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் பெயரினை இடைவெளியில் குறிப்பிடுக.

A- முதல்நிலைச் சந்தையில் பங்குபற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ……………………………………………………………

B- கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் என்பவற்றுடன் இடைத்தரகராக தொழிற்படும் நிறுவனங்கள் ………………………………………………………………

C- புதிய முயற்சியாளர்களின் வணிக நடவடிக்கைகளுக்கான மூலதனத் தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் நோக்கில் செயற்படும் நிறுவன வகை …………………………………...

D- நிதிக் கருவிகளை விற்பனை செய்யும் இடை நடுவர்கள் ……………………………………..

45) வணிக நடவடிக்கைகளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவம் நான்கு தருக.

(1) …………………………………………………………………………………………………...

(2) …………………………………………………………………………………………………...

(3) …………………………………………………………………………………………………...

(4) …………………………………………………………………………………………………...

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

*46)* முகாமையாளரொருவர் சூழ்நிலை தலைமைத்துவத்தை (Situational Leadership) பின்பற்றும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

*(1)* ……………………………………………………………………………………………..

*(2)* ……………………………………………………………………………………………..

*(3)* ……………………………………………………………………………………………..

*(4)* ……………………………………………………………………………………………..

*47)* உழைப்பு உற்பத்தித் திறனை விருத்தி செய்யக்கூடிய முறைகள் நான்கு தருக.

*(1)* ……………………………………………………………………………………………..

*(2)* ……………………………………………………………………………………………..

*(3)* ……………………………………………………………………………………………..

*(4)* ……………………………………………………………………………………………..

*48)* விலை குறித்தலின் குறிக்கோள்கள் நான்கு தருக.

*(1)* ……………………………………………………………………………………………..

*(2)* ……………………………………………………………………………………………..

*(3)* ……………………………………………………………………………………………..

*(4)* ……………………………………………………………………………………………..

*49)* கொழும்பு பங்குப் பரிமாற்றத்தில் கொடுக்கல், வாங்கல் செய்யப்படும் பிணைப்பத்திரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*(1)* ……………………………………………………………………………………………..

*(2)* ……………………………………………………………………………………………..

*(3)* ……………………………………………………………………………………………..

*(4)* ……………………………………………………………………………………………..

*50)* வணிக உலகில் தற்போதைய போக்காகக் காணப்படும் பின்வரும் தொழில்நுட்பங்களுக்கு (Technology) விரிவாக்கம் தருக.

*(1)* AI : ................................................................................................................................

*(2)* AR : ................................................................................................................................

*(3)* IoT : ................................................................................................................................

*(4)* RPA : ................................................................................................................................

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023**

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

**5 rd Term Examination - 2023**

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வி - II<br>Busincss Studics - II | Three Hours<br>Gr : 13 (2023) | 33 | T | II |

**அறிவுறுத்தல்கள்:**

❖ **ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி II "ஆ"

01) க.பொ.த உயர்தரத்தில் வர்த்தக பிரிவில் கல்வி கற்ற நர்த்தனன் என்பவர் ஆடை உற்பத்தித் துறையில் சந்தைத் தலைவராக வர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இதற்காக இவர் இலங்கையில் ஆடை உற்பத்திக் கைத்தொழில் துறை தொடர்பாகவும் சூழல் தொடர்பாகவும், தனது இயலுமை தொடர்பாகவும் சூழல் பகுப்பாய்வு ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அதன் பிரகாரம் இலங்கை இறக்குமதியில் பெருமளவு பங்கினை வகிக்கும் பின்னப்பட்ட ஆடைகள் தொடர்பில் (Knitted or Crocheted Fabric) புதிய வேறுபட்ட வடிவமைப்பு மேற்கொள்ளல் மற்றும் சூழல் நேய (ECO. Friendly) உற்பத்தி நோக்கம் கருதி முன்கூட்டியே திட்டம் ஒன்றினை தயாரித்து தனது பிரதேசத்தில் தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார். இவ் வுற்பத்திக்குத் தேவையான இயந்திரங்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்திருந்ததுடன், ஊழியர்களை தனது பிரதேசத்திலிருந்து பெற்றிருந்தார். நவீன தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப இயைபாக்கமடைவதில் நிதி இயலுமை காணப்படாமையும், வெளிநாட்டு பொருட்களுடன் போட்டியிட வேண்டிய தேவையும் நர்த்தனை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு.

i. அ) மேற்படி சம்பவத்தின் நர்த்தனன் வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் தேவை மற்றும் விருப்பத்தைக் குறிப்பிடுக.

ஆ) நர்த்தனன் சூழல் பகுப்பாய்விற்கு பயன்படுத்திய நுட்பத்தினைக் குறிப்பிடுக.

இ) மேற்படி சூழல் பகுப்பாய்வு நுட்பத்தின் மூலம் நர்த்தனன் வணிகத்தில் இனங்காணக்கூடிய விடயங்களை சம்பவத்திலிருந்து உதாரணம் தருவதன் மூலம் விளக்குக. *(04 புள்ளிகள்)*

ii. அ) சூழல் நேய உற்பத்தியாக நர்த்தனன் பின்னப்பட்ட ஆடைகளை தெரிவு செய்வதற்கு கவனமாக அமையும் இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

ஆ) நரத்தனின் வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

iii. அ) ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் பொருளாதாரச் சூழல் காரணிகள் நான்கு தருக?

ஆ) நர்த்தனன் வணிகத்தினை பின்வரும் நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

a) உற்பத்தித் துறை
c) நோக்கம்
b) உற்பத்தித் தன்மை / நிலை
d) உரிமை

iv. அ) நர்த்தனன் வணிகம் இலங்கையின் பொருளாதார வாழ் தன்மைக்கு பங்களிப்புச் செய்யும் வழிமுறைகள் நான்கு தருக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஆ) மேற்படி வணிகம் நிறைவேற்றும் சமூக ரீதியான பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

v. அ) முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகளை நர்த்தனன் வணிகத்தினை உதாரணமாகக் கொண்டு தருக.

ஆ) வணிகமொன்று நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் கவனம் செலுத்தி தனது வணிக நடடிவடிக்கைகளை மேற்கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

*02)*

i. அ) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவரில் வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகள் நான்கு தருக.

ஆ) அரசின் வரி வருமானத்திற்குள் நேர் வரிக்குள் உள்ளடங்கும் வரிகளைக் குறிப்பிடுக.

ii. "பொது நோக்கமொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒன்றிணைந்திருக்கும் தனிநபர் குழுவொன்றினால் உருவாக்கப்பட்ட சமூக அலகு அமைப்பாகும்"

அ) உமது பிரதேசத்தில் காணப்படும் அமைக்களுக்கு நான்கு உதாரணம் தருக.

ஆ) ஒழுங்கு முறையான அமைப்பொன்றில் காணப்படும் பண்புகள் நான்கு தருக.

*(04 புள்ளிகள்)*

iii. வணிக அமைப்பு வகைகளில் தனி வியாபாரம், பங்குடை வணிகம் தொடர்பாக பின்வரும் பண்புகளை விளக்குக.

a. வரையறுக்கப்படாத நட்டப்பொறுப்பு

b. சட்ட ஆளுமை *(04 புள்ளிகள்)*

iv. அ) வரையறுத்த சொந்தக் கம்பனியுடன் ஒப்பிடும் போது பொதுக்கம்பனியில் காணப்படும் அனுகூலங்கள் நான்கு தருக.

ஆ) கூட்டுறவு வணிகமொன்றைப் பரிவு செய்வதற்கு கூட்டுறவு ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

v. "முயற்சியாண்மை ஒரு பொருளாதாரத்திற்கு எரிபொருளாகக் காணப்பட்டால் அதன் இயக்கும் இயந்திரமாக (Engine) சிறு வணிகங்களாகும்" இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு சிறு வணிகங்களின் பங்களிப்பினை ஆராய்க? *(04 புள்ளிகள்)*

*03)*

i. அ) பணமற்ற பொருளாதாரம் (Cashless economy) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) மேற்படி பொருளாதரம் இயங்குவதற்கு காரணமாக அமையும் இலத்திரனியல் உபகரணங்களுக்கு நான்கு உதாரணம் தருக? *(04 புள்ளிகள்)*

ii. அ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான நோக்கங்கள் இரண்டினையும் முன் வைக்குக.

ஆ) வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கினை பேணுவதனால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் வசதிகள் நான்கு தருக.

iii. வணிகங்களின் நீடித்த வாழ்தன்மைக்கு காப்புறுதியின் ஏன் முக்கியத்துவத்தை ஆராய்க.

*(04 புள்ளிகள்)*

iv. அ) வாய்மொழி மூலமான தொடர்பாடலின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு தருக.

ஆ) செய்தியொன்றைத் தயாரிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

v. போக்குவரத்து ஊடகமொன்றைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் மிகவும் அனுகூலமான போக்குவரத்து முறைகளைக் குறிப்பிடுக.

a) கிரயம் b) வேகம் c) இயலளவு d) தாராளத்தன்மை

*04)*

i. அ) "களஞ்சியப்படுத்தல்" என்பதை வரையறுக்க.

ஆ) களஞ்சியசாலை ஒன்றினை நிறுவும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

ii. அ) "முகவர்கள்" எனப்படுவோர் யார் என்பதை வரையறுக்குக.

ஆ) முகவர்களை அவர்கள் வழங்கும் சேவைக்கு ஏற்ப வகைப்படுத்திக் காட்டுக.

iii. அ) ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படும் பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படுவதற்கான நோக்கங்களைக் குறிப்பிடுக.

a) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் / தோற்றுவாய் சான்றிதழ் Letter of origin

b) கப்பல் தளச்சீட்டு (Warfingers Report)

iv. வியாபாரச் சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், சர்வதேச அமைப்புக்கள் என்பன வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் நான்கு தருக.

v. அ) "P 2 P வணிகம்" (P 2 P Bysines) என்பதனால் கருதப்பவது யாது?

ஆ) இலத்திரனியல் விணகத்தினூடாக நுகர்வோருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.

*05)* தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையில் வாழ்க்கை செலவிற்கேற்ப சம்பளம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் சஹானா கம்பனியின் ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் வரை சென்றுள்ளனர். இதற்கு பொருத்தமான தீர்வினை உடனடியாக எடுக்க வேண்டிய நிலையில் நிறுவன முகாமை காணப்படுகின்றது.

i. அ) "தீர்மானமெடுத்தல்" என்பதால் நீர் கருதுவது யாது?

ஆ) "தீர்மானமெடுத்தல்" படிமுறைகளை ஒழுங்கு முறையில் தருக?

இ) மேற்கூறிய சம்பவத்தில் இனங்காணப்படும் பிரச்சினைக்கு பொருத்தமான மாற்றுத் தீர்வுகள் இரண்டினை முன்வைக்குக. *(04 புள்ளிகள்)*

ii. முகாமையாளர் ஒருவர் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் போது அவர்களின் தனிப்பட்ட தேவைகளை திருப்திப்படுத்தக் கூடிய வகையில் மேற்கொள்ள வேண்டும்.

அ) ஏபிரகாம் மால்லோவின் தேவை மற்றும் ஊக்கப்படுத்தல் கோட்பாட்டின் படி சுய திறனில் நிறைவுத் தேவையை ஒரு ஊழியர் அடைய வேண்டுமெனின் முகாமையாளர் ஒருவர் அவ் ஊழியரை எவ்வாறு ஊக்கப்படுத்த வேண்டும்?

ஆ) ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவம் நான்கு தருக?

இ) ஊழியர்களை வேலை செய்ய தூண்டச் செய்வதற்காக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் பிரதான இரு ஊக்குவிப்பு முறைகளைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

iii. அடிப்படை முகாமைத்துவத் திறன்களில் ஒன்றான எண்ணக்கருவாக்கத்திறன் முகாமைத்துவக் கருமங்களுடன் தொடர்புபடும் விதத்தை விளக்குக. *(04 புள்ளிகள்)*

iv. அ) தீர்மானமெடுத்தல் வகிபாகத்தில் உப வகிபாகங்கள் நான்கினையும் குறிப்பிடுக.

ஆ) முறையற்ற தொடர்பாடல் ஒன்றினால் நிறுவனத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

v. அ) செயற்பாட்டு முகாமைத்துவத்திற்குரிய கருமங்கள் நான்கு தருக?

ஆ) தொழிற்சாலைத் தள அமைப்புத் திட்டமொன்றின் முக்கியத்துவம் நான்கு தருக?

*(04 புள்ளிகள்)*

(மொத்தம் *20* புள்ளிகள்)

*06)*

i. "உற்பத்தி நிலைமாற்றல் செயற்பாடுகளின் போது உற்பத்தி நிறுவனமொன்றிற்கு உற்பத்தி முறையினை தெரிவு செய்வது என்பது மிகவும் பிரதானமானதொன்றாகும்."

a) கட்டளை உற்பத்தி முறை ஒன்றிஅ னுகூலங்கள் இரண்டு தருக.

b) கட்டளை உற்பத்தியில் பொருள் அல்லது சேவையினைப் பெற விரும்பும் வாடிக்கையாளருக்கு ஏற்படும் பிரச்சினைகள் / பிரதிகூலங்கள் இரண்டு தருக?

c) கட்டளை உற்பத்திக்கான உதாரணங்கள் இரண்டு தருக?

d) ரொக்கேற் (Rocket) உற்பத்தியானது கட்டளை உற்பத்தியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான காரணம் யாது என நீர் கருதுகின்றீர்?

*(04 புள்ளிகள்)*

ii. அ) உற்பத்திக் கம்பனியொன்றின் தொக்கு (இருப்பு) தொடர்பான தகவல்கள் சில வருமாறு?

ஆண்டுக்குரிய கேள்வி (அலகுகள்) 20 000

கட்டளையிடல் கிரயம் (கட்டளை ஒன்றிற்கு) ரூ 160

அலகொன்றின் களஞ்சியப்படுத்தல் கிரயம் (ஆண்டொன்றிற்கு) ரூ 10

- குறிப்பிட்ட பொருளுக்கான சிக்கன கட்டளைத் தொகையினைக் கணிப்பிடுக.

ஆ) உற்பத்தி முறையொன்றினைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

iii. அ) இருப்பு கட்டுப்பாட்டு நுட்பங்கள் / முறைகள் நான்கின் பெயர்களைத் தருக.

ஆ) தரக் கட்டுப்பாட்டை பேணுவதால் கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

iv. அ) பொருளாதாரமொன்றிற்கு சந்தைப்படுத்தல் செயற்பாடுகளின் முக்கியத்துவங்கள் நான்கு தருக.

ஆ) நான்கு வணிகங்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாக வெளிப்படுத்திய கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றது.

a) சாமந்தி வணிகம் :
பாரியளவிலான விற்பனை மேம்படுத்தல் முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எமது விற்பனையை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றோம்.

b) சஞ்சீவன் வணிகம் :
நுகர்வோர் திருப்தியிலும் வணிக நோக்கத்திலும் அவதானம் செலுத்துவதோடு சமூகம், சூழல், ஒழுக்க விழுமியங்கள் மீதும் அவதானம் செலுத்தி கருமமாற்றுகின்றோம்.

c) வரையறுத்த மலரவன் தனி கம்பனி :
இலக்கு சந்தையின் தேவைகள், விருப்பங்களை இனங்கண்டு அதற்குரிய பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து விற்பனையை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கின்றோம்.

d) வரையறுத்த சாமா வணிகம்
ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் தேவைகள், விருப்பங்களை சிறப்பாக இனங்கண்டு அவற்றைத் திருப்திப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கின்றோம்.

மேற்கூறிய கூற்றுக்கள் ஒவ்வொன்றினூடாகவும் வெளிப்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

v. அ) வாடிக்கையாளர் கோணத்தில் சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் நான்கினையும் குறிப்பிடுக.

ஆ) மனித தேவை, விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக சந்தையில் முன்வைக்கப்படும் எந்தவொன்றையும் "உற்பத்தி" (Prodyct) என அழைக்க முடியும். அந்த வகையில் உற்பத்திகளுக்கு உதாரணங்கள் சில கீழே தரப்படுகின்றது.

மின்சார உபகரணங்கள், இரும்பு, சவர்க்காரம், வீட்டுத்தளபாடங்கள், சில்லுகள், பத்திரிகை, புதிய புத்தகங்கள், புதிய இலத்திரனியல் உபகரணங்கள்.

மேற்குறித்த உற்பத்திகளை கீழே தரப்படும் தலைப்புகளுக்கு ஏற்ப வகைப்படுத்திக் காட்டுக.

a) வசதிப் பொருட்கள் Convenience Goods.
b) கடைப் பொருட்கள் Shopping Goods.
c) நாடாப் பொருட்கள் Unsought Goods.
d) மூலப் பொருள்களும் உதிரிப்பாகங்களும் Materiats and parts.

*(04 புள்ளிகள்)*

*07)*

i. எவரேனம் விற்பனையாளரொருவரினால் விற்பதற்கு முன் வைக்கப்படுகின்ற உற்பத்திகளின் தொகுதி உற்பத்திப் பொருள் வரிசை ஆகும்.

அ) கீழே குளிர் களி உற்பத்தி நிறுவனமொன்றினால் முன் வைக்கும் உற்பத்திப் பொருள் வரிசை தொடர்பான அட்டவணை தரப்படுகின்றது.

| பால் பொதி (Milk pacret) | குளிர்களி (Ice cream) | குளிர்பானம் (Cool drinks) |
|---|---|---|
| • வெனிலா (Vanila)<br>• சொக்லட் (Chocalate) | • வெனிலா<br>• சொக்லட்<br>• ஸ்ரோபெரி<br>• பழங்கள் | • மாம்பழம்<br>• தோடம்பழம்<br>• பழக்கலவை |

மேலே தரப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் கீழே தரப்படும் விடயங்களுக்கான விடைகளைத் தருக.

a) உற்பத்தியின் அகலம் -
b) உற்பத்தியின் நீளம் -
c) உற்பத்தியின் ஆழம் -
d) ஒருமைப்பாடு - *(04 புள்ளிகள்)*

ii. அ) பொருத்தமான விநியோக வழிமுறையொன்றினைத் தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

ஆ) சந்தைப்படுத்தல் கலவை மாறிக்குள் உள்ளடங்கும் மேம்படுத்தல் கருவிகள் நான்கின் பெயர்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

iii. அ) பண்டக்குறி (Brond Name) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) இலங்கையில் வணிகங்கள் தமது சின்னங்களை எச் சட்டத்தின் கீழ் பரிவு செய்ய வேண்டும்.

இ) சிறந்த சின்னமொன்றில் காணப்படும் பண்புகள் நான்கு தருக? *(04 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

iv. அ) வணிகமொன்றின் வெற்றிக்கு முதலீட்டுத் தீர்மானம் ஏன் முக்கியமானது என்பதை விளக்குக.

ஆ) வணிக நிறுவனமொன்று வெளியக ரீதியாக நிதி திரட்டுவதனால் ஏற்படும் பிரதிகூலங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

v. அ) நிதி இணைப்பு விகிதங்களின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) இலங்கையின் வங்கித் துறைக்குள் உள்ளடங்கும் வங்கி வகைகளைக் குறிப்பிடுக.

இ) பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

a) முன்னுரிமைப் பங்குகள் (Preference shares)

b) கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக் கடன் (Cooperate Debentures)

*(04 புள்ளிகள்)*

*08)*

i. அ) நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கம் யாது?

ஆ) நிதி முகாமைத்துவத்தின் போது நிதி முகாமையாளரினால் எடுக்கப்படும் தீர்மான வகைகள் எவை?

இ) இறுங்கால மற்றும் நீண்டகால நிதித் தேவைக்கு இவ்விரண்டு உதாரணம் தருக.

*(04 புள்ளிகள்)*

ii. அ) வணிக நிறுவனம் ஒன்றில் தேவையான தொழிற்படு மூலதனம் இல்லாவிடின் ஏற்படும் பிரச்சினைகள் நான்கு தருக.

ஆ) பணச்சந்தையில் உள்ளடங்கும் துணைச் சந்தைகள் நான்கின் பெயர்களைத் தருக.

*(04 புள்ளிகள்)*

iii. ஏனைய வளங்களோடு ஒப்பிடும் போது மனித வளங்களில் காணப்படும் விசேட பண்புகள் நான்கு தருக? *(04 புள்ளிகள்)*

iv. மனித வளத்திற்கான நிரம்பலைத் திட்டமிடும் போது கருத்தில் கொள்ளப்படும் அக, புற ரீதியான காரணிகள் இவ்விரண்டு தருக? *(04 புள்ளிகள்)*

v. மனித வளத் திட்டமிடலின் முக்கியத்துவம் நான்கு தருக? *(04 புள்ளிகள்)*